தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

*******

ஆணை எண். 088/2021
நாள். 06.12.2021

திரு. வெங்கடேசன்,
செய்யாறு. – முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்
திருவத்திபுரம் நகராட்சி – எதிர்மனுதாரர்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, காந்தி சாலை, 420 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வெங்கடேசன் என்பவரின் 10.06.2020 நாளிட்ட முறையீட்டு மனு 16.06.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 88/2021 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம், எதிர் மனுதாரர்களான திருவத்திபுரம் நகராட்சியின் பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோரின் வாக்குமூலங்கள், திருவத்திபுரம் நகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணுமாறு ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு, காந்தி சாலை, 420 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திரு.வெங்கடேசன் என்பவர் "திருவண்ணாமலை மாவட்டம், திருவத்திபுரம் நகராட்சி அலுவலகத்தின் மூலம் UIDSSMT 2018–2019 திட்டத்தின் கீழ் ரூபாய் 85.00 இலட்சம் பணி மதிப்பீட்டில் Providing Internal Plumbing Works for Water Supply House Service Connection in Thiruvathipuram Municipality – எனும் அரசின் திட்டப் பணிக்கான டெண்டரை நடத்தி ஒப்பந்தப்புள்ளி மேற்கொண்டதில், திருவத்திபுரம் நகராட்சியின் ஆணையாளர், நகராட்சி பொறியாளர் மற்றும் நகராட்சி அலுவலக பொறியியல் பிரிவு எழுத்தர் ஆகியோர் முறைகேடுகள் செய்து, மேற்படி அரசின் திட்டப்பணியினை செய்ததில் ஊழல் மற்றும் முறைகேடுகள் செய்து நகராட்சிக்கு பல இலட்சம் ரூபாய் நிதி இழப்பினை ஏற்படுத்தி உள்ளார்கள் என புகார் தெரிவித்துள்ளார்.

மேற்படி அரசின் திட்டப்பணியினை ரூபாய் 85.00 இலட்சம் (ரூபாய் எண்பத்தைந்து லட்சம் மட்டும்) பணி மதிப்பீட்டில் செய்வதற்கான Technical Sanction – உத்திரவு Roc.No. 13277/2018/DO1. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அலுவலகம் சென்னை 600 005 மூலம் 22.01.2019 தேதியன்று வழங்கப்பட்டது. ஆனால் மேற்படி தொழில் நுட்ப அனுமதி ஆணை வழங்குவதற்கு முன்பே மேற்படி ஒப்பந்தப்பணியை செய்வதற்கான டெண்டரை நடத்துவதற்கான டெண்டர் நோட்டீசை திருவத்திபுரம் நகராட்சி ஆணையாளர் அவரது அலுவலக ந.க.எண்.1024/2018/இ1/நாள்.21.01.2019 மூலமாக வெளியிட்டு டெண்டர் விதிமுறையினை மீறி டெண்டரை முறைகேடாக நடத்தியுள்ளார்.

2. மேற்படி ஒப்பந்தப்பணிக்காக 22.02.2019 அன்று நடத்தப்பட்ட டெண்டரில் கலந்து கொண்டு டெண்டர் கொடுப்பதற்கு உரிய அனைத்து ஒப்பந்த தகுதிகளையும் பெறாத ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர், மேற்படி ஒப்பந்தப் பணிக்காக கொடுத்த ஒப்பந்தப்புள்ளியை அதிலும் பணி மதிப்பீட்டு தொகையைவிட 4.93 சதவீதம் கூடுதலாக கொடுத்த ஒப்பந்தப்புள்ளியினை மேற்படி நகராட்சி ஆணையாளர் திரு.S.ஸ்டான்லி பாபு அவர்கள் ஏற்று டெண்டர் விதிமுறையினை மீறியுள்ளார்.

22.02.2019 அன்று நடத்தப்பட்ட டெண்டரில் மேற்படி ஒப்பந்தப்பணிக்காக ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளியினை பரிசீலனை செய்து ஏற்று கொண்ட நகராட்சி ஆணையாளர், மேற்படி ஒப்பந்தப்புள்ளி தொடர்பான Letter of Acceptance நகராட்சி ஆணையாளர், ROC-No.1024/2018/E1 நாள்.25.02.2019 தேதியிட்ட கடிதத்தை ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவருக்கு நகராட்சி ஆணையாளர் சமர்பித்து அதில் Letter of Acceptance கடிதம் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள் ஒப்பந்த பணி மதிப்பீட்டு தொகையில் 2% தொகையினை Security Deposit in terms of clause 30 of the Tender Document-ன் படி நகராட்சி அலுவலகத்தில் செலுத்துமாறும், மற்றும் ஒப்பந்தப்பணி தொடர்பான Agreement ஆவணத்தை ரூபாய் 20 Judical Stamp Paper மூலமாக நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க தெரிவித்து அவ்வாறு 2% Security Deposit தொகை செலுத்திட மற்றும், ஒப்பந்தப்புள்ளி Agreement ஆவணத்தை நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்திட தவறும் பட்சத்தில் ஒப்பந்தப்புள்ளி முன்னறிவிப்பு கடிதம் ஏதும் இன்றி இரத்து செய்யப்பட்டு டெண்டர் EMD தொகை பறிமுதல் செய்யப்படும் என்றும் நகராட்சி ஆணையாளர் தெரிவித்து இருந்தார்.

3. மேலும் Letter of Acceptance கடிதத்தில் வரிசை எண்.3 ல் You are informed that this is only the letter of acceptance of your bid, formal work order will be issued on remitting the 2% Security Deposit and Execution of agreement என்றும் நகராட்சி ஆணையாளர் தெரிவித்து உள்ளார். மேற்படி 25.02.2019 தேதியிட்ட Letter of Acceptance கடிதத்தை பெற்று ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் மேற்படி கடிதத்தில் குறிப்பிட்டவாறு 2% Security Deposit தொகையினை குறிப்பிட்ட காலத்திற்குள் (15 நாட்களுக்குள்) நகராட்சி அலுவலகத்தில் செலுத்தவில்லை. ஆனால் மேற்படி ஒப்பந்தப் பணிக்கான Agreement ஆவணத்தை மட்டுமே ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் 26.02.2019 தேதியில் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்து உள்ளார். 25.02.2019 தேதியிட்ட Letter of Acceptance கடிதத்தில் குறிப்பிட்டவாறு 2% Security Deposit தொகையினை நகராட்சி அலுவலகத்தில் குறிப்பிட்ட காலத்தில் ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர்

செலுத்தாததை காரணம் காட்டி டெண்டர் விதிமுறைப்படி ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளியினை மேற்படி நகராட்சி ஆணையாளர் நிராகரிக்கவில்லை மற்றும் Cancellation செய்யவில்லை.

4. இதற்கு மாறாக மேற்படி நகராட்சி ஆணையாளர், ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவருக்கு மேற்படி ஒப்பந்தப்பணியை செய்வதற்கான ஆணையினை 27.02.2019 அன்று வழங்கியுள்ளார். அவரது மேற்படி செயலானது டெண்டர் விதிமுறையினை மீறிய, டெண்டர் சட்டத்திற்கு புறம்பான மற்றும் முறைகேடான செயல் ஆகும். இதன் மூலமாக மேற்படி நகராட்சியின் ஆணையாளர் திரு.S.ஸ்டான்லி பாபு அவர்கள் ஒப்பந்ததாரர் A.தனசேகரனுக்கு சாதகமாகவும் நகராட்சி நிர்வாக நலனுக்கு எதிராகவும் செயல்பட்டு மேற்படி ரூபாய் 85.00 இலட்சம் (ரூபாய் எண்பத்தைந்து லட்சம் மட்டும்) பணி மதிப்பீடு உடைய ஒப்பந்தப்பணியை எப்படியாவது தனக்கு மிகவும் வேண்டிய ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவருக்கு கிடைத்திட செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு நகராட்சி ஆணையாளர் தன் சுய விருப்பப்படி செயல்பட்டு ஒப்பந்தப்பணிக்கான டெண்டர் விதிமுறையினை மீறி ஒப்பந்தப்பணிக்கான உத்திரவினை முறைகேடாக வழங்கி டெண்டரில் முறைகேடு செய்து உள்ளார். அவரது மேற்படி முறைகேடான செயல்களுக்கு உடந்தையாக மேற்படி நகராட்சி பொறியாளர் R.எட்வின் பிரைட் ஜோஸ் என்பவரும் மற்றும் நகராட்சி பொறியியல் பிரிவு எழுத்தர் கீர்த்திவாசன் என்பவரும் செயல்பட்டுள்ளனர். இவ்வாறு முறைகேடாக வழங்கப்பட்ட ஒப்பந்தப்பணி ஆணையின்படி மேற்படி ஒப்பந்தப்பணியை ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் செய்ததில் முறைகேடுகள் மற்றும் ஊழல்கள் நடந்துள்ளன.

5. மேலும் மேற்படி பணியில் உரிய ஆய்வகம் மூலமாக தரச்சான்று பெறாத நிலையில் உபகரணங்கள் பொருத்தப்பட்டு மேற்படி ஒப்பந்தப்பணி தரமற்ற வகையில் செய்யப்பட்டு உள்ளது. ஒப்பந்ததாரருக்கு சாதகமாக மற்றும் அதிகலாபம் கிடைத்திடும் வகையில் மேற்படி நகராட்சி அலுவலர்கள் உறுதுணையாக செயல்பட்டு உள்ளனர். மேலும் மேற்படி ஒப்பந்தப்பணியில் பொருத்தப்பட வேண்டிய Water meter, Water meter Box, Gm Flow Control Value 10 LPM போன்ற அவசியமான உபகரணங்கள் பொருத்தப்படாமல் மேற்படி ஒப்பந்தப்பணி ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவரால் முறைகேடாக செய்யப்பட்டு உள்ளது. இதனை நகராட்சி ஆணையாளரும், நகராட்சி பொறியாளரும் மற்றும் நகராட்சி பிட்டரும் கண்டு கொள்ளவில்லை ஒப்பந்ததாரருக்கு சாதகமாக செயல்பட்டு உள்ளனர். நகராட்சி நிர்வாக நலனுக்கு எதிராக செயல்பட்டு உள்ளனர். மேற்படி ஒப்பந்தப்பணியில் நகராட்சி மூலம் முறையாக வீட்டுவரி விதிக்கப்படாத 1000 வீடுகளுக்கு முறை கேடாக புதியதாக வீட்டுக்குடிநீர் குழாய் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும் நகராட்சி மூலம் வீட்டு வரி விதிக்கப்பட்ட வீடுகளுக்கு புதியதாக வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு உரிய மதிப்பீட்டு ஆவணம் நகராட்சி அலுவலக பிட்டரால் முறையாக தயாரிக்கப்பட்டு புதிய வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கான கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டு, உரிய ஆவணம் வாயிலாக நகராட்சி ஆணையாளரின், அதற்கான ஒப்புதல் ஆணை முறையாக பெறப்படாத நிலையில் மேற்படி அரசின் திட்டப்பணியின் கீழ் 27.02.2019 முதல் இன்றைய தேதி வரையில் சுமார் 1200 புதிய வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் நகராட்சி சட்ட திட்டங்களுக்கு புறம்பாகவும் முறைகேடாகவும் வழங்கப்பட்டுள்ளது. நகராட்சி மூலம் புதியதாக வீட்டு குடிநீர் குழாய் இணைப்பு வழங்குதல் தொடர்பான நகராட்சி சட்ட விதிகள் பின்பற்றப்படாமல் விதிகள் மீறி புதிய வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

6. இவ்வாறு மேற்படி அரசின் திட்டப்பணியின் கீழ் 27.02.2019 முதல் 01.06.2020 வரையில் புதியதாக வழங்கப்பட்ட புதிய வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகளுக்கும் நகராட்சி சட்டப்படி குடிநீர் கட்டணம் செலுத்துவது தொடர்பான குடிநீர் கட்டண வரி விதிப்பு முறையான ஆவணங்கள் அடிப்படையில் நகராட்சி ஆணையாளரால் 08.06.2020 ஆம் தேதிவரையிலும் முறையாக செய்யப்படவில்லை. இதன் மூலம் மேற்படி நகராட்சிக்கு நகராட்சி ஆணையாளர் பல இலட்சம் ரூபாய் நிதி இழப்பினை ஏற்படுத்தியுள்ளார். இதற்கு உடந்தையாக நகராட்சி பொறியாளரும், நகராட்சி பொறியியல் பிரிவு E1 எழுத்தரும் செயல்பட்டு உள்ளனர்.

7. இவ்வாறு மேற்படி அரசின் திட்டப்பணியானது முறைகேடாகவும் தரச்சான்று பெறாத தரமற்ற உபகரணங்களை கொண்டு தரமற்ற வகையிலும், மேற்படி ஒப்பந்தப்பணியில் பொருத்த வேண்டிய உபகரணங்கள் பலவற்றை பொருத்தாமல் முறைகேடாக ஒப்பந்ததாரர் A.தனசேகரன் என்பவர் செய்த பணிகளுக்கு உரிய பட்டியல் தொகையினை தற்போது ஒப்பந்ததாரருக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்படி திருவத்திபுரம் நகராட்சி அலுவலகம் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி மூலமாக புதியதாக வீட்டுக் குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்குவது தொடர்பான நகராட்சி சட்ட விதி மற்றும் வழிமுறைகளுக்கு முற்றிலும் மாறாகவும் முறைகேடாகவும் மேற்படி அரசின் திட்டப் பணியின் கீழ் ஒப்பந்ததாரர் மூலமாக புதியதாக வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு உரிய பட்டியல் தொகையினை தற்போது வழங்கிட உள்ளது சட்டத்திற்கு புறம்பான செயல் ஆகும்.

8. அவ்வாறு வழங்கப்பட்டால் நகராட்சி சட்ட விதி முறையினை மீறிய முறைகேடான செயல் ஆகிவிடும் மேலும் நகராட்சிக்கு பல இலட்சம் ரூபாய் நிதி இழப்பு ஏற்படும். மேற்படி அரசின் திட்டப்பணியானது ஒப்பந்ததாரர் மூலமாக அரசு அங்கீகாரம் பெற்ற ஆய்வகம் மூலம் தரப்பரிசோதனை செய்யப்படாத உபகரணங்கள் கொண்டு தரமற்ற வகையிலும் செய்யப்பட்டு உள்ள நிலையில் மேற்படி ஒப்பந்தப்பணியை செய்ததற்கான பட்டியல் தொகையினை நகராட்சி மூலம் வழங்குவது சட்டத்திற்கு புறம்பான நடவடிக்கை ஆகும் முறைகேடான செயல் ஆகும் மற்றும் தண்டனைக்குரிய குற்றச் செயலாகும்.

9. மேற்கூறிய குற்றச்சாட்டுகளை தெரிவித்த மனுதாரர் மேற்படி அரசின் திட்டப்பணி தொடர்பான உரிய ஆவணங்களை வரவழைத்து உரிய நீதி விசாரணையினை நடத்தி புகார் தொடர்புடைய அலுவலர்கள் மீது சட்டப்படியாக நடவடிக்கையினை எடுக்கவேண்டுமாறும், மற்றும் நகராட்சி சட்டத்திற்கு புறம்பாகவும், முறைகேடாகவும், தரமற்ற வகையிலும் ஒப்பந்ததாரரால் செய்யப்பட்ட மேற்படி அரசின் திட்டப்பணிக்கான பட்டியல் தொகையினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தின் நீதி விசாரணை முடியும் காலம் வரையில் சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு திருவத்திபுரம் நகராட்சி ஆணையாளர் வழங்காமல் இருப்பதற்கான இடைக்கால தடை ஆணையினை நகராட்சி நிர்வாக நலன் கருதி உடன் பிறப்பிக்கவேணுமாறும் வேண்டிக் கேட்டுக் கொண்டுள்ளார்.

10. இம்முறைமன்ற அழைப்பாணை நாள் 01.03.2021 மூலம் மனுதாரர் திரு.வெங்கடேசன் மற்றும் எதிர் மனுதாரர்கள் திருவத்திபுரம் நகராட்சி முன்னாள் ஆணையர் திரு.S.ஸ்டான்லி பாபு, முன்னாள் உதவி பொறியாளர் திரு.R.எட்வின் பிரைட் ஜோஸ் திரு.கீர்த்திவாசன் இ-1 பிரிவு எழுத்தர், பொறியியல் பிரிவு, திருவத்திபுரம் நகராட்சி ஆகியோர்

11.03.2021 அன்று இம்முறைமன்றத்தில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

11. இந்நேர்வில் எதிர்மனுதாரர்கள் நிர்வாக காரணங்களினால் 11.03.2021 அன்று விசாரணைக்கு வர இயலாது என்ற காரணத்தை தெரிவித்து விசாரணைக்கு மாற்று தேதி நிர்ணயிக்குமாறு கேட்டுக் கொண்டதையொட்டி எதிர்மனுதாரர்களை 15.03.2021 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு ஆணையிடப்பட்டது.

12. 11.03.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் ஆஜரான மனுதாரர் திரு.தா.வெங்கடேசன் அவர்கள் தன்னுடைய வாக்குமூலத்தில் “எனது 11.03.2021 நீண்ட அறிக்கையையே எனது வாக்குமூலமாக பதிவு செய்து கொள்ளுமாறு தங்களை கேட்டுக் கொள்கிறேன்” என தெரிவித்து 11.03.2021 நாளிட்ட தனது அறிக்கையினை இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அவரது அறிக்கையை 10.06.2020 நாளிட்ட தனது மனுவில் தெரிவித்த புகார்களையே குறிப்பிட்டு ஒப்பந்ததாரர் திரு.A.தனசேகரனுக்கு சாதகமாகவும், உடந்தையாகவும் நகராட்சி அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

13. 15.03.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் ஆஜரான திருவத்திபுரம் முன்னாள் நகராட்சி ஆணையர் திரு.ஸ்டான்லி பாபு “மேற்கண்ட முறையீட்டு மனு தொடர்பாக 15.03.2021 நாளிட்ட எனது அறிக்கையினை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன். இந்த நீண்ட அறிக்கையையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்கிறேன்”. என தெரிவித்து 15.03.2021 நாளிட்ட தனது அறிக்கையின் இம்முறைமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார். அவரை தொடர்ந்து திருவத்திபுரம் முன்னாள் நகராட்சி பொறியாளர் திரு.எட்வின் பிரைட் ஜோஸ் (தற்போது உதவி பொறியாளர், செங்கல்பட்டு நகராட்சி அலுவலகம்) மற்றும் திருவத்திபுரம் நகராட்சி இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.கீர்த்திவாசன் ஆகியோரும் தங்களது 15.03.2021 நாளிட்ட அறிக்கைகளை சமர்ப்பித்து அதையே தங்களது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தங்களது வாக்குமூலத்தில் வேண்டி கொண்டுள்ளார்கள்.

14. 20.09.2021 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடந்த விசாரணையில் திருவத்திபுரம் நகராட்சியின் தற்போதைய பொதுப்பணி மேற்பார்வையாளர் திரு.அ.பிரேம்சுந்தர் மற்றும் நகராட்சி பொறியாளர் திரு.எல்.ரவிச்சந்திரன் ஆகியோர் ஆஜராகி அவர்களுடைய வாக்குமூலத்தை பதிவு செய்தனர். திரு.அ.பிரேம்சுந்தர் தன்னுடைய வாக்குமூலத்தில்:-

“திருவத்திபுரம் நகராட்சியில் குடிநீர் இணைப்பு இல்லாத 2345 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ரூபாய் 85 லட்சம் மதிப்பீடு கொண்ட இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி அறிக்கை 21.01.2019 அன்று தயார் செய்யப்பட்டு 24.01.2019 அன்று தினசரி நாளிதழில் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான தொழில்நுட்ப அனுமதி 22.01.2019 அன்று வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் ஒப்பந்தப்புள்ளி அறிக்கை தவறுதலாக தயார் செய்யப்பட்டது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி நாள் 22.02.2019 அன்று இரண்டு ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டுள்ளது (1) திரு.எ.தனசேகரன், 4.93 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகமானது, (2) வி.கோபு 6.03 சதவீதம் மதிப்பீட்டை விட அதிகமானது. இதனடிப்படையில் குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்த

திரு.எ.தனசேகரன் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்ததாரர் சுமார் 1000 குடியிருப்புகளுக்கு இணைப்புகள் வழங்கியிருந்தார். மேற்படி பணி தொடர்பான அளவு புத்தங்கள் ஏதும் இதுநாள் வரையில் பதியப்படவில்லை. ஆனால் ஒப்பந்தப் புள்ளியில் தெரிவித்துள்ளவாறு உபகரணங்களை இணைப்புகளில் பொருத்தவில்லை. இப்பணியின் மூலம் வழங்கப்பட்ட குடிநீர் இணைப்புகளுக்கு குடிநீர் வழங்கப்படவில்லை. மேற்கண்ட குடிநீர் இணைப்புப் பணிகளுக்கு முன்வைப்புத் தொகை 1 சதவீதம் ஒப்பந்தப்புள்ளியுடன் ஒப்பந்ததாரரால் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால் கூடுதல் வைப்புத் தொகையான 1 சதவீதம் ஒப்பந்ததாரரால் அளிக்கப்படவில்லை. மேலும் வங்கியின் உத்தரவாதமும் ஒப்பந்ததாரரால் கொடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணிகளில் தவறுகள் கண்டறியப்பட்டதால், ஒப்பந்தம் 02.07.2021 நாளிட்ட நகராட்சி ஆணையரின் செயல்முறை கடிதத்தின்படி ரத்து செய்யப்பட்டு, பணிகளை தொடரவும் ஒப்பந்ததாரருக்கு அனுமதி மறுக்கப்பட்டுவிட்டது. இதனை எதிர்த்து ஒப்பந்ததாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, அவ்வழக்கு 02.08.2021 அன்று முடித்து வைக்கப்பட்டது (Disposed) என்பதை இம்மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன். வழக்கு தொடர்பான உயர்நீதிமன்ற ஆணை கிடைக்கப்பெற்றவுடன் இன்னும் ஒரு வார காலத்திற்குள் இம்முறைமன்றத்தின் முன் சமர்பிக்கிறேன். மேலும், மேற்கண்ட 1000 குடிநீர் இணைப்புகளின் மெயின் லைன் தற்காலிமாக அடைக்கப்பட்டுள்ளது என்பதையும் இம்மன்றத்தின் முன் தெரிவித்துக்கொள்கிறேன்.

15. நகராட்சி பொறியாளர் திரு.எல்.ரவிச்சந்திரன் அவர்கள் தன்னுடைய வாக்குமூலத்தில்:-

"திருவத்திபுரம் நகராட்சியில் குடிநீர் இணைப்பு இல்லாத 2345 குடியிருப்புகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ரூபாய் 85 லட்சம் மதிப்பீட்டில் நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைவான ஒப்பந்தப்புள்ளியை அளித்த திரு.எ.தனசேகரன் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டது. ஒப்பந்ததாரர் சுமார் 1000 குடியிருப்புகளுக்கு இணைப்புகள் வழங்கியிருந்தார். ஆனால் ஒப்பந்தப்புள்ளியில் தெரிவித்துள்ளவாறு உபகரணங்களை இணைப்புகளில் பொருத்தவில்லை. மேற்கண்ட குடிநீர் இணைப்புப் பணிகளுக்காக முன்வைப்புத் தொகையோ அல்லது வங்கியின் உத்தரவாதமோ ஒப்பந்ததாரரால் கொடுக்கப்படவில்லை. எனவே, மேற்கண்ட பணிகளில் மிகுந்த குறைபாடுகள் கண்டறியப்பட்டதால், அவ்வொப்பந்தம் 02.07.2021 நாளிட்ட நகராட்சி ஆணையரின் செயல்முறை கடிதத்தின்படி ரத்து செய்யப்பட்டு, பணிகளை தொடர்வதற்கான அனுமதியும் ஒப்பந்ததாரருக்கு மறுக்கப்பட்டுவிட்டது. ஒப்பந்த பணிகளை ரத்து செய்ததை எதிர்த்து, ஒப்பந்ததாரரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்டு, அவ்வழக்கு 02.08.2021 அன்று முடித்து வைக்கப்பட்டது. (Disposed) மேலும் இந்நேர்வு தொடர்பான எனது விரிவான அறிக்கையையும் இத்துடன் இணைத்துள்ளேன்" என தெரிவித்துருந்தார்.

16. மனுதாரர் அளித்துள்ள புகார்கள் மீதான அறிக்கையை அனுப்புமாறு திருவத்திபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டது. திருவத்திபுரம் நகராட்சி ஆணையர் தனது 20.09.2021 நாளிட்ட அறிக்கையில்:-

மேற்படி மனுதாரரின் 28.10.2020ந் தேதிய மனுவின் மீது உரிய விசாரணையினை திருவத்திபுரம் நகராட்சி ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.1563/2020/இ1 நாள்

05.01.2021 தேதிய கடிதத்தின் மூலம் இத்திட்டப்பணி தொடர்பான நேரடி விசாரணைக்கு 07.01.2021ம் தேதி ஆஜராக தெரிவித்து மனுதாரர் திரு.டி.வெங்கடேசன் மற்றும் ஒப்பந்ததாரர் திரு.எ.தனசேகரன் ஆகிய இருவருக்கும் கடிதம் அனுப்பப்பட்டது. இதனை தொடர்ந்து மேற்படி நேரடி விசாரணைக்கு ஆஜராகி எழுத்துப்பூர்வமான விளக்கத்தினை சம்மந்தப்பட்ட இரு நபர்களும் அளித்திருந்தனர். இதனடிப்படையில் நகராட்சி பொறியாளர் மூலம் நேராய்வு மேற்கொண்டதில் இத்திட்டப் பணி மேற்கொண்ட ஒப்பந்ததாரர் திரு.எ.தனசேகரன் ஒப்பந்த விதிமுறைகளை மீறி செயல்பட்டுள்ளது கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டது.

எனவே, இப்பணியினை திருவத்திபுரம் நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.1563/2021/இ1 நாள் 02.07.2021ன் படி இரத்து செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டு ஒப்பந்ததாரர் திரு.எ.தனசேகரன் அவர்களுக்கு தபால் மூலம் சார்வு செய்யப்பட்டது. மேற்படி பணியாணை இரத்து செய்யப்பட்டதை எதிர்த்து திரு.எ.தனசேகரன் என்பவரால் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண். W.P No.15955/2021 ஆணையருக்கு எதிராக தொடரப்பட்டது. மேற்படி வழக்கு தொடர்பான விசாரணை 02.08.2021 அன்று நகராட்சிக்கு சாதமாக தீர்ப்பு வழங்கப்பட்டு வழக்கு முடிக்கப்பட்டது என்ற விவரம் கோப்பின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. மேலும், நான் திருவத்திபுரம் நகராட்சி ஆணையாளராக 30.07.2021 முற்பகல் முதல் பணியில் சேர்ந்தேன். மேற்படி நீதிமன்ற தீர்ப்பாணை கிடைக்கப்பெற்ற உடன் குடிநீர் குழாய் இணைப்பு முறைப்படுத்த தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்" என தெரிவித்துள்ளார்.

17. மனுதாரரின் மனு, அவருடைய வாக்குமூலம், திருவத்திபுரம் நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் ஆகியோர் அளித்த வாக்குமூலம், திருவத்திபுரம் நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன. பரிசீலனையில் கீழ்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டுள்ளன:–

- திருவத்திபுரம் நகராட்சியில் ரூ.85.00 இலட்சம் (ரூபாய் எண்பத்தைந்து இலட்சம் மட்டும்) செலவில் குடிநீர் இணைப்புகள் வழங்க நகராட்சியின் நிர்வாக ஆணையர் அலுவலகம் தொழில் நுட்ப அனுமதி 22.01.2019 அன்று வழங்கியது. ஆனால் இதற்கு முன்பாக ஒப்பந்தப்புள்ளி அறிக்கையானது 21.01.2019 அன்று நகராட்சியால் வெளியிடப்பட்டுள்ளது.

- ஒப்பந்ததாரர் திரு. A. தனசேகரன் அவர்கள் மேற்கண்ட குடிநீர் இணைப்பு பணிகளுக்கு ஒரு சதவீதம் முன்வைப்புத்தொகையை மட்டுமே ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்தியுள்ளார். ஆனால் செக்யூரிட்டி டெபாசிட் (Security deposit) இரண்டு சதவீதம் செலுத்தவில்லை.

- வங்கியின் உத்திரவாதமும் ஒப்பந்ததாரரால் அளிக்கப்படவில்லை, இருந்தபோதிலும் அவருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

- இந்நேர்வில் ஒப்பந்ததாரர் திரு A. தனசேகரன் மேற்கொண்ட ஒப்பந்த பணிகளில் மிகுந்த குறைபாடுகள் கண்டறியப்பட்டதால் அவருடைய ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

18. எனவே, மேற்கண்ட நிகழ்வுகளை காணும்போது இந்நேர்வில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளதாக அறியமுடிகிறது. மேற்காணும் முறைகேடுகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஒப்பந்த பணிகளில் நகராட்சிக்கு இழப்பு ஏற்பட்டிருந்தால் அதனை ஒப்பந்ததாரரிடமிருந்து வசூல் செய்து நகராட்சி கணக்கில் ஈடு செய்யுமாறும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 06 ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. வெங்கடேசன்,
420, காந்தி சாலை,
செய்யாறு – 604 407,
திருவண்ணாமலை மாவட்டம்.

2) ஆணையாளர்,
திருவத்திபுரம் நகராட்சி,
திருவண்ணாமலை மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 28.

நகல்:
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032